Tamil Nadu Social Security Scheme

*201 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of Thiru K. S. Ganapathi): Will the Hon. the Chief Minister be pleased to state whether Government Servants and teachers who are contributors to the Tamil Nadu Government Servants' Family Benefit Fund Scheme are eligible to contribute to the Tamil Nadu Social Security Scheme also?

தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

தமிழ்நாடு அரசு ஊழியர் குடும்ப நலத் திட்டத்திற்குத் தொகை செலுத்துகின்ற அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கும் தொகை செலுத்தத் தகுதி உடையவர்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆம்.

Vacation Salary to Teachers transferred from one School to another

*202 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Government have given permission to the Diocese of Madurai and Ramanathapuram to incorporate the transfer clause in the agreement with the teachers under its management; and

(b) if so, whether the Government will pass orders to pay the vacation salary to the teachers transferred from one school to another without insisting on the condition to serve for eight months in a particular school to be eligible to draw the vacation salary?

ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாற்றப்படும் ஆசிரியர்களுக்கு விடுமுறைச் சம்பளம்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை, இராமநாதபுரம் மாவட்டத் திருச்சபையின் (Diocese) நிர்வாகத்தின் கீழ் உள்ள ஆசிரியர்களுடன் அந்நிர்வாகம் செய்துகொண்டுள்ள